**TAMIL**

# The Spoken Word

by

WILLIAM MARRION BRANHAM

# ஏழு பரிமாணங்கள்

**(THE SEVEN DIMENSIONS)**

# பறக்கும் தட்டுகள்

**(FLYING SAUCERS)**

ஏழாம் தூதன்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

"உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து"

# ஏழு பரிமாணங்கள்

## கொலோசெயர் 1:15–17

அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

இதைக்குறித்து தேவனுடைய தீர்க்கதரிசி பிரான்ஹாம் கூறியுள்ளதை கவனியுங்கள்:

*உங்களுக்கு ஞாபகமுள்ளதா, அண்மையில் எனக்குக் கிடைத்த அந்த தரிசனத்தில் – அதை சிறு மறுரூபப்படுதல் என்று அழைக்க விரும்புகிறேன் – நான் மேலே எடுக்கப்பட்டு லட்சக்கணக்கான ஜனங்களைக் கண்டு, நான் திரும்பிப்பார்த்த போது, என் உடலைக் கீழே கண்டேன். "நான் இயேசுவைக் காண விரும்புகிறேன்" என்றேன்.*

*"அவர் இன்னும் உயரத்தில் இருக்கிறார்" என்றார்.*

*நல்லது, பாருங்கள், ஜனங்கள் மரிக்கும் போது, அவர்கள் உடனே தேவனிடம் செல்வதில்லை. உங்களுக்குப் புரியும் என்று நிச்சயமுடையவனா யிருக்கிறேன். ஒருக்கால் என்னால் முடிந்த வரையில் அதை நான் உங்களுக்கு விளக்கித் தர வேண்டும். நீங்கள் அவசரமாக போக வேண்டுமா? நாம் நேரத்தை எடுத்துக்கொண்டு, கூடுமான வரையில் அதை தெளிவுபடுத்துவோம்.*

*நாம் இவ்வுலகிற்கு வரும்போது, இங்கு மூன்று பரிமாணங்களில் வாழ்கிறோம் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அவை என்னவென்று என்னால் குறிப்பிட முடியுமா இல்லையாவென்று எனக்குத் தெரியவில்லை. அவைகளில் ஒன்று ஒளி, மற்றொன்று பொருள் (matter). டாமி, மூன்றாவது என்னவென்று ஞாபகமுள்ளதா? (யாரோ ஒருவர் ஏதோவொன்றை*

கூறுகிறார் – ஆசிரியர்) ஊ? ("அணு.") அணுவா? (வேறு யாரோ ஒருவர், "காலம்" என்கிறார்) காலம். சரி. இப்பொழுது, ஒளி, பொருள், காலம். நமது ஐம்புலன்கள் இந்த பரிமாணங்களுடன் தொடர்பு கொள்கின்றன. நமது பார்வை ஒளியுடன் தொடர்பு கொள்கிறது, நமது உணர்ச்சி பொருளுடன் தொடர்பு கொள்கின்றது, இப்படியாக.

ஆனால் விஞ்ஞானத்தின் மூலம் நாம் நான்காம் பரிமாணத்துடன் தொடர்பு கொள்கிறோம். இப்பொழுது இந்த கட்டிடத்தின் வழியாக படங்களும், வானொலி குரல்களும், தொலைக்காட்சி படங்களும் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளுடன் நமது புலன்கள் தொடர்பு கொள்ள இயலவில்லை. ஆனால் அவர்களிடம் ஒரு குழாயோ அல்லது ஒரு படிகமோ உள்ளது. அது ஈதர் அலைகளை கிரகித்துக் கொண்டு அவைகளைக் காண்பிக்கிறது. எனவே பாருங்கள், இந்த கட்டிடத்திற்குள்ளேயே, ஜனங்கள் புரியும் செயல்களும், காற்றிலே அவர்களுடைய குரல்களும் உள்ளன. அவை இங்குள்ளன. அது நமக்குத் தெரியும். அது முற்றிலும் உண்மை. நீங்கள் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று; அவர்கள் அதை கிரகிக்க வைக்கின்றனர்... விஞ்ஞானம் கண்டுபிடித்த இவைகளை அவர்கள் எவ்விதம் செய்கின்றனர் என்று எனக்குப் புரிவதில்லை. ஆனால் நான்காம் பரிமாணம் ஒன்றுண்டு என்பதை அது நமக்கு நிரூபிக்கிறது.

பாவி, அவிசுவாசி மரித்த பிறகு போகும் இடமே ஐந்தாம் பரிமாணம். அந்த ஐந்தாம் பரிமாணம் மிகவும் பயங்கரமான பரிமாணம். இந்த மனிதன்...

**ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது, அவன் ஆறாம் பரிமாணத்துக்குச் செல்கிறான்.**

**தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார்.**

அப்படியானால், பாருங்கள், கிறிஸ்தவன் மரிக்கும்போது, அவன் தேவனுடைய பலிபீடத்தின் கீழ், தேவனுடைய சமுகத்துக்குள், பலிபீடத்தின் கீழ் சென்று அங்கு இளைப்பாறுகிறான்.

இதை தனித்தனியே பார்ப்போமானால். ஒரு மனிதனுக்கு தீக்கனவு (nightmare) உண்டாகுமானால், அவன் முழுவதும் உறக்க நிலையில் இல்லை, அவன் விழித்துக் கொண்டிருக்கவும் இல்லை. அவன் உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையே உள்ள நிலையில் இருக்கிறான். அது தான் அவனுக்கு பயங்கரமான நடுக்கம் ஏற்படும்படி செய்து, அவனை அலற வைக்கிறது. ஏனெனில் அவன் உறங்கிக் கொண்டிருக்கவில்லை, விழித்துக் கொண்டிருக்கிறான். அதை நாம் எடுத்துக் கொண்டால், மனம் மாற்றம் அடையாத ஒரு மனிதன் எங்கு செல்கிறான் என்பதை அது காண்பிக்கிறது. அவன் தன் காலத்தை வாழ்ந்து முடித்து விட்டு, உலகில் மரிக்கிறான். அவன் தேவனுடைய சமுகத்தில் செல்ல முடியாது. ஏனெனில் இரத்தம் இல்லாமல் அங்கு செல்ல அவன் தகுதியுடையவன் அல்ல. அவன் மாட்டிக் கொள்கிறான். அவனால் மறுபடியும் உலகத்திற்கு வரமுடியாது, ஏனெனில் உலகத்தில் அவனுடைய காலம் முடிந்து விட்டது. அவன் இடையிலே மாட்டிக் கொண்டு தீக்கனவைப் பெறுகிறான். பாருங்கள்? அவன் தேவனுடைய சமுகத்துக்குச் சென்று

இளைப்பாற முடியாது. அதே சமயத்தில் அவனால் உலகத்திற்கு வரவும் முடியாது. ஏனெனில் அவனுடைய காலம் முடிந்து விட்டது. அவன் தீக்கனவில் இருக்கிறான். அங்கே அவன் நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் இருக்கிறான். அதில் இருப்பது மிகவும் பயங்கரமான காரியம், பாருங்கள்.

இந்த தரிசனத்தில், நான் ஆறாம் பரிமாணத்துக்கு எடுக்கப்பட்டேன் என்று நினைக்கிறேன். திரும்பிப் பார்க்கும் போது, என்னால் காண முடிந்தது. பாருங்கள், அந்த பார்வை பூமிக்குரிய கண்களினால் காணும் பார்வையல்ல. அந்த பார்வை மேலானது... **அவர்களுக்கு அங்குள்ள பார்வை, நமது மாம்ச புலன்கள் தொடர்பு கொள்வதைக் காட்டிலும் மிக அதிக தூரம் தொடர்பு கொள்ள வல்லது.**

சில நாட்களுக்கு முன்பு அதை இங்கு விளக்கினேன். நான் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் கண்டேன். அவர்கள் ஒரு மனிதனை கடலில் இரண்டு மைல் அல்லது ஒரு மைல் ஆழத்தில் இறக்கி விட்டனர். ஒளிக்கதிர்கள் அங்கிருந்து புறப்பட்டு சென்றன. அவர்கள் கடலில் வாழும் பிராணிகளைக் காண்பித்தனர். அப்பொழுது ஒரு மீன் வந்தது - விகாரமாகத் தோற்றமளித்த ஒன்று. அது நள்ளிரவு, அங்கு மிகவும் இருட்டாக இருந்தது. அவைகளுக்கு மூக்கில் பாஸ்வரம் (phosphorus) இருந்தது, கண்கள் இல்லை. அவை இரை தின்ன வேண்டும். எனவே அவை இரை தேட வேறொரு புலன் மூலம் வழிநடத்தப்பட்டன. கண் பார்வை யினால் அல்ல. ஏனெனில் அங்கு உபயோகிக்க

அவைகளுக்கு கண்கள் இல்லை. தங்கள் இரையைக் கண்டுபிடிக்க, அவை வேறொரு புலன் மூலம் வழிநடத்தப்பட்டன. "நான் மாத்திரம் என் பார்வையினால் அந்த மீனை கட்டுப்படுத்த முடியுமென்றால், அதை வெவ்வேறு இடங்களுக்கு நடத்திச் சென்று, எவ்வளவு அதிகமாக அதற்கு இரையை அளிக்க முடியும்? அது தொடர்பு கொள்ளும் 'ரேடாரை'க் (radar) காட்டிலும் என் பார்வை எவ்வளவு மேலானது" என்று எண்ணினேன்.

அப்பொழுது எனக்கு இது மனதில் தோன்றியது: "நான் மாத்திரம் என்னை முழுவதுமாக தேவனிடம் அர்ப்பணித்தால், தேவனுடைய பார்வையும் புலன்களும் எவ்வளவு அதிகம் சக்தி வாய்ந்தவை! நாம் காண்பவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமாக நம்மை வழிநடத்தக்கூடியவர் யார்? ஏனெனில் அவர் நமக்களிக்கும் விசுவாசம் நம்முடைய கண்களினால் நாம் காணாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது." அந்த மீன் மற்ற மீன்களைப் போலவே மேலே வர முடியாது. ஏனெனில் அது அழுத்தம் கொண்டுள்ளது. அதை நீங்கள் மேலே கொண்டு வந்தால், அது வெடித்து விடும் – நாம் உயர செல்லும்போது, வெடிப்பதை தடுக்க முடியாதது போல. நாம் வாழும் இடத்துக்கு ஏற்றவாறு அழுத்தம் கொண்டுள்ளோம்.

அந்த சிறிய மீன் மாத்திரம் இங்கு வந்து என்னைப் போல ஆக நேர்ந்தால், அது மறுபடியும் அந்தகாரத்துக்கு சென்று சிறு மீனாக இருக்க விருப்பம் கொள்ளுமா? அதற்கு மறுபடியும் மீனாக இருக்க விருப்பம் இருக்காது; ஏனெனில் அது மீனைக்

காட்டிலும் உயர்ந்தது, அது ஒரு மனிதன். அதன் புலன்கள் உயர்ந்தவை, அதன் புரிந்து கொள்ளும் தன்மை மேலானது, அதன் அறிவு உன்னதமானது. அதை ஒரு கோடியில் பெருக்குங்கள், அதை தான் நீங்கள் இங்கிருந்து மேலே தேவனுடைய சமுகத்துக்கு செல்லும்போது பெறுவீர்கள். அப்பொழுது ஒரு மனிதன் இங்கிருந்ததைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையை அடைவான். நீங்கள் மறுபடியும் மனிதனாக இருக்க, வியாதியும் அழிவும் நேரிடக்கூடிய பூச்சரிக்கும் இந்த சரீரத்தில் வாழ, ஒருபோதும் விரும்ப மாட்டீர்கள். நான் முப்பது ஆண்டுகளாக உலகம் முழுவதும் இந்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களிடம், ஆதாயமாகப் பெற்றுக் கொள்ள பரலோகம் ஒன்று உண்டென்றும், நாம் புறக்கணிக்க வேண்டிய நரகம் ஒன்று உண்டென்றும், உங்களை நேசிக்கும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், மீட்கும் வல்லமை ஒன்று உண்டென்றும், அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயுள்ள எந்த நேரத்திலும் உங்களிடம் வர அது காத்திருக்கிறது என்றும் கூறி வந்திருக்கிறேன். இதுவே என் இருதயத்தில் இருந்து வந்திருக்கிறது.

தண்ணீரில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் அங்கு ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, "அந்த கயிற்றை பிடித்துக் கொண்டு என்னால் மேலே வர முடியும். ஆனால் அந்த கயிற்றைப் பெற நான் பாத்திரன் அல்ல" என்று சொல்வது போல்.

நீங்கள் தண்ணீரை விட்டு வெளியே வந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும்

நோக்கத்துக்காகவே அந்த கயிறு அங்கு வைக்கப்பட்டுள்ளது. பாவிகளை இரட்சிக்க வேண்டும் என்னும் நோக்கத்துக்காகவே இயேசு கிறிஸ்து மரித்தார். அவர் நித்திய ஜீவன் என்னும் கயிற்றை தொங்க விட்டிருக்கிறார். அது இன்றிரவு ஒவ்வொரு பாவியின் தலை மேலும், "அதை விட்டு வெளியே வா" என்று எழுதப்பட்டுள்ள வரவேற்பு அட்டையுடன் ஆடிக்கொண்டிருக்கிறது. அப்படி செய்ய நீங்கள் விரும்பினால், அதற்கான ஆயத்தம் செய்யப்பட்டு விட்டது.

அந்த இடத்தையும், இந்த உலகம் நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலையில் அந்த ஜனங்களையும் நான் கண்ட போது, அது மிகவும் மகிமையாயிருந்தது. அங்கு பாவம் இருக்க முடியாது, மரணமோ அல்லது வேறெதுவோ அந்த இடத்தில் நுழைய முடியாது. அங்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமில்லை, இனச்சுரப்பிகள் அவர்களை விட்டுப் போயிருந்தன. அங்கு விபசாரமோ மற்றெதுவோ இருக்க முடியாது. ஆனால் ஒரு பெண் தன் பெண் உருவத்தையும், ஒரு ஆண் தன் ஆண் உருவத்தையும் கொண்டிருந்தனர். அவர்கள் சதாகாலங்களிலும் அப்படியே இருப்பார்கள்.

**என் ஊழியத்தின் தற்போதைய கட்டம்,**
**செப்டம்பர் 8, 1962, பத்தி எண் 19–31**

## ஏழு பரிமாணங்கள்

1. முதலாவது பரிமாணம் – ஒளி
2. இரண்டாவது பரிமாணம் – பொருள்
3. மூன்றாவது பரிமாணம் – காலம்
4. விஞ்ஞானத்தின் மூலம் நாம் நான்காம் பரிமாணத்துடன் தொடர்பு கொள்கிறோம்
5. பாவி, அவிசுவாசி மரித்த பிறகு போகும் இடமே ஐந்தாம் பரிமாணம்
6. ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது, அவன் ஆறாம் பரிமாணத்துக்குச் செல்கிறான்
7. தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார்

இப்பொழுது, நாம் அதை ஒரு சுகமளிக்கும் ஆராதனையில் பொருத்தியுள்ளோம். எப்பொழுதுமே சுகமாக்குதலின் பாகத்துடன். புற்று நோய், கட்டி, சதை வளர்ச்சி, காசநோய் மற்ற எல்லா காரியங்களும் இயற்கையான காரியங்கள் அல்ல, அவை இயற்கைக்கு மேம்பட்டவை மற்றும் பிசாசுகள் ஆகும். வேதாகமம் அதை தெளிவாக உறுதிபடுத்துகின்றது. ஆனால் அது சரீரத்தில் இருக்கின்ற பிசாசுகள் தான், சதை வளர்ச்சிகள், புற்று நோய் போன்றது, அதற்குள் ஜீவன் இருக்கின்றது, அந்த ஜீவனானது பிசாசினுடையதாக இருக்கின்றது. கண் சதை வளர்ச்சி, காச நோய் பரவுதல், மற்றும் மற்ற வியாதிகள், அவை

பிசாசுகளாகும். அது சரீரப்பிரகாரமாக இருக்கின்ற ஒன்று.

இப்பொழுது, இக்காலை நாம் ஆத்துமாவில் ஆவிக்குரிய ரூபத்தில் இருக்கின்ற பிசாசுகளைக் குறித்து நாம் பேசப் போகிறோம் – பேசப் போகிறோம். அவைகள் சரீரத்தில் இருக்கின்றதைப் போலவே அதே விதமாக அவைகள் ஆத்துமாவில் இருக்கின்றன. அவை மக்களின் சரீரத்தில், புற்று நோய்களாக மற்றும் – மற்றும் மானிட உடலில் இருக்கின்ற பலவித வியாதிகளாக நாம் காண்கையில் நாம் அதை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**சமீபத்தில், புற்று நோயும் கூட நான்காம் பரிமாண நோய் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது, அது வேறொரு பரிமாணமாகும்.** நிச்சயமாக, அது பிசாசு செயல்படுகின்ற பிசாசியலாகும். ஒவ்வொரு **வியாதியும் நான்காம் – பரிமாண வியாதியாகும்,** அது துவக்கமும் கூட.

**மயக்கியிழுக்கும் ஆவிகள், ஜூலை 24, 1955, பத்தி எண் 38–40**

இப்பொழுது கவனியுங்கள். நித்திய மகத்துவ மானவரும், இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனு மானவர் முதலில் ஆவியாக இருந்தார். மாம்சத்தில் வெளிப்படுவதற்காக, இரண்டாவதாக வார்த்தை யென்னும் சரீரமாகிய ஆவிக்குரிய சரீரத்தில் (theophany) தோன்றினார். மெல்கிசேதேக்காக ஆபிரகாமை சந்தித்த போது இவ்விதமான சரீரத்தில் தான் இருந்தார். அவர் ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தார்.

கர்த்தருக்கு சித்தமானால் இன்னும் சில நிமிடங்களுக்குள் இதை நிரூபிப்போம்.

அவர் வார்த்தையாக இருந்தார். 'தியாபனி' (theophany) **யென்னும் ஆவிக்குரிய சரீரத்தை நீங்கள் பார்க்க முடியாது. அது இப்பொழுது இங்கே இருக்கக் கூடும். ஆயினும் அதை நீங்கள் காண முடியாது. அது டெலிவிஷனைப் போல இன்னொரு பரிமாணத்தில்** (dimension) **உள்ளது.** டெலிவிஷன்... இப்பொழுது, மக்கள் இந்த அறையில் பாடிக்கொண்டும், அசைந்துக் கொண்டும் இருக்கிறார்கள்; பலவிதமான நிறங்களிலும் இருக்கின்றனர். ஆனால் கண்ணானது ஐந்து அறிவுகளின் தன்மைக்கு கட்டுப்பட்டிருக்கிறது. உங்களது முழு சரீரமே ஐந்து அறிவுக்குள் தான் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதனுடைய பார்வையின் எல்லைக்குள் இருப்பதை மாத்திரம் தான் கண் பார்க்க முடிகிறது. ஆனால் இன்னொரு பரிமாணத்தில் உள்ளதை 'டெலிவிஷன்' ஐ இயக்கும் கருவியின் மூலமாக மாத்திரமே பார்க்க முடியும்.

டெலிவிஷன் ஒரு உருவத்தை உருவாக்குவதில்லை. டெலிவிஷன் ஒளி அலைகளை இழுத்து கருவியின் அமைப்புக்குள் அனுப்பும் போது அங்கிருக்கும் ஒரு சிறு திரை அவைகளை உருவங்களாக காண்பிக்கிறது. ஆரம்பத்திலேயே உருவங்கள் அங்கிருந்தன. ஆதாம் இருந்த போது டெலிவிஷனும் அங்கே இருந்தது. எலியா கர்மேல் பர்வதத்தின் மீது இருந்த போது டெலிவிஷன் அங்கே இருந்தது. நசரேயனாகிய இயேசு கலிலேயாக் கடற்கரையில் நடந்த போது டெலிவிஷன்

அங்கிருந்தது. ஆனால், நீ அதை இப்பொழுது தான் கண்டுபிடித்திருக்கிறாய். அவர்கள் அப்பொழுது அதை நம்பி இருக்க மாட்டார்கள். அதை நீ அப்பொழுது கூறியிருப்பாயானால் உன்னை பைத்தியக்காரன் என்று கருதியிருப்பார்கள். ஆனால், அது இப்பொழுது ஒரு உண்மையாகி விட்டது! அதேப் போல, கிறிஸ்துவும் இங்கிருக்கிறார்! தேவதூதர்கள் இங்கிருக்கிறார்கள்! அந்த மகத்தான ஆயிர வருஷ அரசாட்சி வரும் போது, இப்போது இங்கிருக்கும் டெலிவிஷன் அல்லது மற்ற பொருட்களைக்காட்டிலும் அதிக நிஜமானதாகக் காணப்படும்.

அவர் தம்முடைய ஊழியக்காரர்களுக்குள் தம்மை மறைத்துக் கொண்டிருக்கிறார் என்று அவர் உரிமையோடே கூறுவது போல் தம்முடைய மகத்தான உருவத்தில் வெளிப்படுத்தி, தம்முடைய பிரசன்னத்தை நிரூபிக்கிறார்.

இப்பொழுது அவர் ஆவியின் ரூபத்தில் இருக்கிறார். பிறகு தன்னை மறைத்துக் கொண்டிருக் கிறவராக உருவத்தில் வருகிறார். இந்த உருவத்தில் தான் ஆபிரகாமுக்கு தோன்றினார். ஆபிரகாம் ராஜாக்களை முறியடித்த பிறகு திரும்பி வரும்போது மெல்கிசேதேக்கு அவனை சந்தித்து பேசினார்.

அன்றொரு நாள் டூசான் செய்தித் தாளில் ஒரு சம்பவத்தை படித்துக் கொண்டிருந்தேன் – ஒரு பெண் சாலையில் தன்னுடைய ‘காரை’ நாற்பது அல்லது ஐம்பது மைல் வேகத்தில் ஓட்டிக் கொண்டிருக்கும் போது, மேல் அங்கியை அணிந்திருந்த ஒரு வயதான மனிதனை இடித்து விட்டாள். அவள் அலறிக்

கொண்டே காரை நிறுத்தினாள். அது அவனை ஆகாயத்தில் தூக்கி எறிந்திருக்கிறது. இச்சம்பவம் ஒரு வனாந்திரமான இடத்தில் நடந்திருக்கிறது. அடிப்பட்டவனை பார்ப்பதற்காக அவள் கீழே இறங்கி ஓடியிருக்கிறாள்; ஆனால் அந்த ஆளோ அங்கிருக்கவில்லை. அந்த வயதான மனிதன் தன்னுடைய மேல் அங்கியுடன் மேலே ஆகாயத்தில் பறந்து சென்றதை அவளுக்குப் பின்னால் வந்த சிலர் பார்த்திருக்கின்றனர். ஆகவே, நடந்ததை அறிந்து கொள்ள அவர்களும் ஓடியிருக்கிறார்கள். அவர்கள் அந்த மனிதனை எங்கு தேடியும் காணவில்லை. அவர்கள் போலீஸ்காரர்களை அழைத்தனர். போலீஸ்காரர்களும் அந்த இடத்தை சோதித்துப் பார்க்க வந்தனர். ஆனால் அந்த அடிபட்ட மனிதன் காணப்படவில்லை.

'கார்' அந்த மனிதனை இடித்ததைக் குறித்து ஒவ்வொருவரும் சாட்சி கூறினர். அவன் ஆகாயத்தில் சென்றதை ஒவ்வொருவரும் பார்த்தார்கள். இரண்டு அல்லது மூன்று கார்களில் வந்தவர்கள் அதைப் பார்த்ததாக சாட்சி கூறினார்கள். காரியங்களை ஆராய்ந்து பார்த்த போது, ஐந்து வருடங்களுக்கு முன் ஒரு வயதான மனிதன் மேல் அங்கியுடன் அந்த பக்கம் செல்லும்போது ஒரு கார் அவன் மீது மோதியதால் அந்த இடத்திலேயே அவன் மரித்துப் போனான் என்பது தெரிய வந்திருக்கிறது. நீ இந்த இடத்தை விட்டுப் பிரியும் போது மரித்து விடுவதில்லை. நீ ஒரு பாவியாக இருந்தாலும் நீ திரும்பவும் வந்து உன்னுடைய சரீரத்தில் செய்த கிரியைகளுக்காக

நியாயந்தீர்க்கப்பட வேண்டியதாயிருக்கிறது. "பூமிக்குரிய இக்கூடாரம் அழிந்து போனாலும் நமக்கு ஒரு கூடாரம் காத்துக் கொண்டிருக்கிறது" அது தான் ஆவிக்குரிய சரீரமாகிய வார்தை.

**யார் இந்த மெல்கிசேதேக்கு?, பிப்ரவரி 21, 1965, பத்தி எண் 57–63**

நாம் ஒவ்வொருவரும் பாதையின் முடிவை அடைந்து ஒவ்வொரு வார்த்தைக்கும் கணக்கொப்பு விக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இப்பொழுது நமது சத்தங்கள்... நாம் பிறந்த போது, நமது முதலாம் சிறு அழுகுரல் அங்கு ஒலிப்பதிவானது. நியாயத்தீர்ப்பின் நாளில் அது மறுபடியும் போட்டு காண்பிக்கப்படும். நீங்கள் உடுத்தின உடைகளும் கூட நியாயத்தீர்ப்பின் நாளில் உங்களுக்கு காண்பிக்கப்படும். விஞ்ஞானம் அதை தொலைக்காட்சியின் மூலம் கண்டுபிடித்துள்ளது. பாருங்கள், தொலைக்காட்சி ஒரு படத்தை உற்பத்தி செய்வதில்லை. அதை அது ஒரு குழாயின் வழியாக செலுத்துகிறது. உங்கள் உடைகளின் நிறம், ஒவ்வொரு முறையும் நீங்கள் அசையும் போதும், உங்கள் மனதிலுள்ள ஒவ்வொரு சிந்தனையும் தேவனுடைய பதிவுத் தட்டில் பதிவாகியுள்ளது. இவையனைத்தும் உங்களுக்கு முன்னால் வைக்கப்படும் - நீங்கள் இச்சையை தூண்டும் உடைகளை உடுத்த ஒவ்வொரு முறையும் நீங்கள் சிகை அலங்கரிக்கும் இடத்துக்குச் சென்று, தேவன் கொடுத்த தலைமுடியை கத்தரித்த போதும். அது காண்பிக்கப்படும். அதற்காக நீங்கள் பதில் சொல்லியாக வேண்டும். நீங்கள் அசைய முடியாது. அங்கு சரியாக அது இருக்கிறது. அங்கு

நீங்கள் இருதயத்தில் சிந்திக்கும் சிந்தனைகளும் கூட உங்களுக்கு முன்னால் போட்டு காண்பிக்கப்படும். நீங்கள் எப்படி தப்பித்துக் கொள்ள முடியும். இவ்வளவு பெரிதான இரட்சிப்பை நாம் புறக்கணித்தால் எப்படி தப்பித்துக் கொள்வோம். நாம் தப்பித்துக்கொள்ளவே முடியாது. ஒவ்வொரு அசைவும், இருதயத்தின் சிந்தனைகளும் வேறொரு பரிமாணத்தில் பதிவாகிக் கொண்டிருக்கின்றது - நீங்கள் உடுத்தின உடைகளின் நிறமும் கூட. வண்ணத் தொலைக்காட்சி அதை நிரூபிக்கிறது. அது அதை கிரகித்து அதை காண்பிக்கிறது, பாருங்கள். அது நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் மூன்று பரிமாணங்களின் ஒரு பரிமாணமே. பாருங்கள்?

**மறுரூபப்படுத்த தேவனுடைய வல்லமை, செப்டம்பர் 11, 1965, பத்தி எண் 136**

நாம் தேவனுடைய புத்தகத்தின் பக்கங்களை இன்று காலையில் புரட்டி அந்த நேரத்தில் சபை எப்படி இருக்குமென்றும், தேவன் புரிந்துள்ள சாதனைகளை காண முடியுமா என்றும் பார்க்கலாம். ஓ, பூமியில் நடைபெறும் சம்பவங்கள் வேறெங்கோயிருந்து வரும் ஒன்றுக்கு எப்பொழுதும் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன. ஆனால் அவை பூமியை அடையும் போது அது வழக்கமாக தாறுமாறாக்கப் பட்ட நிலையில் இருக்கும். ஏனெனில் அது அந்தகாரமும் பாவமும் நிறைந்த உலகில் நிகழ்கின்றது. பாருங்கள்? ஆனால் ஆவிக்குரிய ஆதிக்கமாகிய மற்றொரு பரிமாணத்தில் அதன் உண்மையான தோற்றம் உள்ளது. மூன்று பரிமாணங்களில் நடப்பவை

ஆறாம் பரிமாணத்தில் நடப்பவைகளுக்கு எடுத்துக் காட்டாய் அமைந்துள்ளன. அதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

**இறங்கு வரிசையில் எண்ணுதல், செப்டம்பர் 9, 1962, பத்தி எண் 56**

இந்த சாதனை விஞ்ஞானத்தால் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அதை உலக கண்காட்சியில் காண்பித்தனர். அதை நாம் பெற்றுள்ளோம். ஆமென். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் விண்வெளி வீரர் காலம் எல்லா விடங்களிலும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. பாருங்கள், "அது தோன்றப்படாதவைகளால் உண்டாக்கப்பட்டது". பாருங்கள், அது பரலோகத்திலுள்ள ஏதோ ஒன்றைக் கொண்டு உண்டாக்கப்பட்டது. தேவனே ஆறாம் பரிமாணத்தில் இங்குள்ளார். அது தேவனுடைய வல்லமை. நாம் ஒரு நிலையை அடைந்து, கல்லறைக்கு சென்று அழுவதும், கதவு கைப்பிடியில் மெல்லிய பட்டுத்துணியைக் கட்டி சதாகாலமும் விடைபெறுவதும் போன்ற செயல்களைக் கடந்து அந்த பரிமாணத்துக்குள் உயர்த்தப்பட்டு விட்டோம். அல்லேலூயா! நாம் விண்வெளி வீரர்களாகி மேலே பறந்து சென்று அது எங்குள்ளது என்பதைக் கண்டு, திரும்பி வந்து விட்டோம். மகிமை! நாம் ஆகாயத்துக்கும் அப்பாலுள்ள, மனித ஞானத்துக்கும் எட்டாத அந்த வீட்டுக்குச் செல்லப் போகிறோம். அங்கு வயோதிபர் ஒரு நொடிப்பொழுதில், ஒரு இமைப்பொழுதில் மறுரூபமடைவார்கள். அங்கு

வயோதிப மனிதரையும் ஸ்திரீகளையும் நாம் வாலிபராகக் காண்போம்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்?" வேதம் அதைப் போதிக்கிறது. தேவன் ஒரு விண்வெளி வீரனை அங்கு செலுத்தினார், அது என்னவென்று நமக்குத் தெரியும், அவன் திரும்பி வந்தான். மரணத்தைக் குறித்து நமக்கு கவலையில்லை. மரணம் என்பது ஒன்றுமில்லை. நிச்சயமாக அது வாழ்தலே. ஆம், ஐயா. அது நாம் செல்வதற்கு நமது பாதங்களை தரையை விட்டு உயர்த்துவதாகும். ஓ, எவ்வளவு அற்புதமானது!

**இறங்கு வரிசையில் எண்ணுதல், செப்டம்பர் 9, 1962 காலை, பத்தி எண் 90**

அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார் என்பதை நினைவுகூருவோமாக – எபி. *13:8.* ஆக்கினைக்குட்பட்டவர்கள் தங்கும் ஸ்தலத்திற்குச் செல்லும் வரை சமயத்தைத் தள்ளிப் போடாதீர்கள், அப்பொழுது தேவனுடைய சமுகத்திற்கு போக முடியாத பரிமாணத்தில் நீங்கள் இருப்பீர்கள். இவ்வுலகில் உங்களுக்குத் தருணம் அளிக்கப் பட்டுள்ளது. உனக்கு அளிக்கப்பட்ட தருணத்தை நீ உதறித் தள்ளினாயென்று, திகில் சூழ்ந்த அந்த ஸ்தலத்தில் நீ வருந்த நேரிடும். வாலிப ஜனங்கள் இதைக் கவனிக்கவும். எல்லாரும் இதில் கவனம் செலுத்துங்கள்.

**ஆண்டவரை நினைவுகூருதல், டிசம்பர் 9, 1962, பத்தி எண் 62**

*பாருங்கள்? மனிதன் மரித்த பின்பு ஆறாம் ஸ்தலத்துக்குப் போகிறான். அது பலிபீடத்தின் கீழிருக்கும். ஆனால் தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார். இது ஆறாவதாகும்.*

**ஐந்தாம் முத்திரை, மார்ச் 22, 1963, பத்தி எண் 392**

*அந்த படத்தில் நீங்கள் கண்ட அந்த ஒளி... ஜார்ஜ், நீ எங்கேயிருக்கிறாய்? படத்திலுள்ள அந்த ஒளி அந்த ஸ்திரீயின் மேல் இப்பொழுது தொங்கிக் கொண்டிருக்கிறது. இது வேறொரு பரிமாணம். அவள் ஒரு விசுவாசி - பாவனை விசுவாசியல்ல, உண்மையான விசுவாசி.*

**பார்வையைத் திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள், டிசம்பர் 29, 1963 மாலை**

*இப்பொழுது பாருங்கள். இது சுவிசேஷ ஊழியத்திலிருந்து ஒரு மாறுதல், ஒரு விதமாக உங்களை சாவதானமாக்கிக் கொண்டு, தேவனுடைய ஆவியானவர் தாமே உங்களை முழுவதுமாக இன்னொரு பரிமாணத்திற்கு கொண்டு போதல்.*

**கோத்திர பிதா ஆபிரகாம், பிப்ரவரி 7, 1964, பத்தி எண் 128**

*நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? நாம் ஒருவருக் கொருவர் அந்நியர் (சகோதரி, "ஆம்" என்கிறார்கள் — ஆசி). கர்த்தராகிய இயேசு நம் இருவரையும் அறிந்திருக்கிறார். இப்பொழுது பயப்படவேண்டாம், பாருங்கள், நீங்கள் ஒருவிதமாக... பாருங்கள், அப்படியே சாந்தமாயிருங்கள். அது அவருடைய பிரசன்னம். பாருங்கள், அது தான். அது அவருடைய*

பிரசன்னம். இப்பொழுது உங்களுக்கு உண்மையாகவே ஒரு வினோதமான, விசித்திரமான உணர்வு – இனிமையான, தாழ்மையான உணர்வு – ஏற்பட்டுள்ளது. பாருங்கள்? இப்பொழுது, ஒரு மனிதனுக்கு முன்னால் நிற்கும் போது, அத்தகைய உணர்வு ஏற்படாது.

உங்களில் எத்தனை பேர் அக்கினி ஸ்தம்பத்தின் புகைப்படத்தை எப்பொழுதாவது கண்டிருக்கிறீர்கள்? அது டெக்ஸாஸில் முதன் முறையாக, இரண்டாம் முறையாக எடுக்கப்பட்டது. இப்பொழுது அது அந்த ஸ்திரீயின் மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது, பாருங்கள் – இப்பொழுது இந்த பரிமாணத்தில். உங்களால் அதைப் பார்க்க முடிந்தால் நலமாயிருக்கும்.

**தேவன் தமது விசேஷ குணங்களினால் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார், மார்ச் 11, 1964, பத்தி எண் 175–176**

விசுவாசம் என்பது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின், ருசிக்கப்படாதவைகளின், உணரப்படாதவைகளின், முகரப்படாதவைகளின், கேட்கப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. **விசுவாசத்தினால், அவன் வார்த்தையை கிரகித்துக்கொள்ளும்போது, அது அவனை ஒரு பரிமாணத்துக்கு கொண்டு சென்று (பாருங்கள்?) அதை மிகவும் உண்மையுள்ள ஒன்றாக அவனுக்குச் செய்து, அது அவன் கையில் இருக்கும் ஒன்றைப் போல் செய்து விடுகிறது. அது நிறைவேறும் என்று அவன் அறிந்து கொள்கிறான்.**

## கேள்விகளும் பதில்களும் (COD 2:19), ஆகஸ்ட் 23, 1964 காலை, பத்தி எண் 97

நான் சென்ற வாரம், இல்லை, அதற்கு முந்தின வாரம் பீனிக்ஸில் கூறினது போன்று, "இந்த உலகத்தின் பொருட்கள், ஜனங்கள் ஆகியோர் இக்கட்டிடத்தின் வழியாக கடந்து சென்று கொண்டிருக்கின்றனர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது." தொலைக்காட்சி அதை நிரூபிக்கிறது. அது வேறொரு பரிமாணத்தில் உள்ளதால், நமது மாம்ச கண்களும், நமது ஐம்புலன்களும் அதை கிரகித்துக் கொள்ள முடிவதில்லை. தொலைக்காட்சி எதையும் புதிதாக உற்பத்தி செய்வதில்லை, அது வாய்க்கால்படுத்துகிறது. நீங்கள் ஒவ்வொரு முறையும் விரல்களை அசைக்கும் போதும் கண்களை இமைக்கும் போதும், அவை என்றென்றைக்கும் பதிவு செய்யப்படுகின்றன. என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. நான் இங்கு நின்று கொண்டிருப்பது... அல்லது ஆஸ்திரேலியாவில் ஒரு மனிதன் நின்று கொண்டிருந்தால், இங்கு ஒரு தொலைக்காட்சி திரை இருக்கும் பட்சத்தில், அவர் பேசுவதும், விரல்களை அசைப்பதும், கண் இமைப்பதும், அவர் உடுத்துள்ள உடைகளின் வண்ணமும் கூட, அந்த திரையில் காணப்படும் – அது ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, உலகின் எந்த பாகங்களிலும் இருந்தாலும் சரி. பாருங்கள், ஈதர் அலைகளின் (ether waves) சக்கரம் ஒன்றுள்ளது. அதை எனக்கு விளக்கத் தெரியவில்லை, ஆனால் அது அங்குள்ளது என்றறிவேன். அதை உண்மையில் யாருமே விளக்க இயலாதென்று நினைக்கிறேன்.

எனவே தொலைக்காட்சி சில இயந்திரங்களின் மூலம் அதை உள்ளே இழுத்து, அதை தத்ரூபமாக்கி, திரையில் பிரதிபலிக்கச் செய்கின்றது.

ஆதாம் இவ்வுலகில் இருந்த போதும் அது இருந்தது. கர்மேல் பர்வதத்தின் மேல் எலியா இருந்த போதும் இந்த தொலைக்காட்சி இருந்தது. அந்த வாலிப குருவானவராகிய லூத்தர் அப்பத்தை தரையில் எறிந்து, "அது கோஷர் (kosher)! விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்" என்றுரைத்த போதும் அது இருந்தது. அப்பொழுது அது இருந்தபோதிலும், இப்பொழுது தான் அதை நாம் கண்டுபிடித்தோம். **அவ்வாறே இன்றிரவு நமது சமுகத்தில் தேவன், தேவதூதர்கள், இயற்கைக்கு மேம்பட்டவர்கள் உள்ளனர். நமது மாம்ச பார்வைக்கு அதை காண இயலவில்லை. ஆனால் என்றாவது ஒரு நாள், இப்பொழுது தொலைக்காட்சி உள்ளது போல், அது தத்ரூபமாகவும் சாதாரண ஒன்றாகவும் அமைந்து விடும். ஆகையால்தான்** நான் வார்த்தையை விசுவாசிக்கிறேன்.

**அது ஏன் மேய்ப்பர்களாக இருக்க வேண்டியதாயிருந்தது?, டிசம்பர் 21, 1964, பத்தி எண் 6–7**

என்றாவது ஒரு நாளில் அவர்கள் ஆயிரத்தறுநூறு கோடி 'லைட் இயர்' (Light-year) விண்வெளி காணவில்லை என்று கண்டுபிடிக்கப் போகின்றனர் ('லைட் இயர்' என்பது ஒளியை அளக்கும் தூரம். ஒரு வினாடிக்கு 1,85,000 மைல் வேகத்தில் செல்லும் ஒளி, ஒரு ஆண்டில் செல்லும் தூரமே ஒரு 'லைட் இயர்'

என்னப்படுகிறது – தமிழாக்கியோன்.) அவர்கள் வட்டம் சுற்றி சுற்றி வந்து கொண்டிருக்கின்றனர்.

ஒரு நாளில் அவர்கள், நீங்கள் பரலோகம் செல்வதற்கு வேறெங்கோ பறந்து செல்ல அவசிய மிராது என்றும், நீங்கள் இங்கேயே இருந்து கொண்டு, இதைக்காட்டிலும் வேகமான வேறொரு பரிமாணத்தை (dimension) அடைவீர்கள் என்று கண்டுபிடிக்கப் போகின்றனர்.

இந்த அறை முழுவதிலும் நிறம் வந்து கொண்டேயிருக்கிறது. நீங்கள் அணிந்துள்ள மேல் சட்டையின் நிறம், நீங்கள் அணியும் ஆடைகள் அனைத்தும் நித்தியமாயுள்ளது. ஏனேனில் அவை பதிவு செய்யப்பட்டு, உலகம் முழுவதும் சுற்றி சுற்றி வருகின்றது. ஒவ்வொரு முறையும் நீங்கள் கண் இமைக்கும் போதும், அது பதிவு செய்யப்படுகிறது. கவனியுங்கள், தொலைக்காட்சி (Television) அதை நிரூபிக்கிறது.

நீங்கள் பிறக்கும் போது, தேவன் ஒளி, ஒலிப்பதிவு ஒன்றை ஆரம்பிக்கிறார். சிறிது காலம் அது அதிக சத்தமிடுவதில்லை – அந்த சிறு குழந்தை கணக்கொப்புவிக்கும் வரைக்கும். அதன்பின்பு சத்தம் தொடங்குகின்றது. அவைகளுக்கெல்லாம் அவன் கணக்கொப்புவிக்க வேண்டியவனாயிருக்கிறான். அவனுடைய வாழ்க்கை முடிவடைந்த பிறகு, அந்த ஒலிநாடா அல்லது இசைத்தட்டு வெளியே எடுக்கப்பட்டு, தேவனுடைய சேமிப்பு நிலையத்தில் வைக்கப்படுகின்றது. நியாயத்தீர்ப்பின் போது, நீங்கள்

எவ்வாறு தப்ப முடியும்? அது உங்கள் முன்னால் போட்டு காண்பிக்கப்படும் - நீங்கள் அசைத்த ஒவ்வொரு அசைவும், உங்கள் சிந்தனையில் எழுந்த ஒவ்வொரு நினைவும். உங்களால் அதைப் புரிந்து கொள்ள முடிகிறதா? இப்பொழுது தேவன் எங்கே என்று காண முடிகிறதா?

அன்றொரு இரவு இங்கு நான் நின்று கொண்டிருந்த போது, உயரமான, வழுக்கை தலையுள்ள, திடகாத்திரமுள்ள மனிதர் ஒருவர் மேடையின் மேல் வந்தார். அவர் பார்வைக்கு அழகாயிருந்தார். அவர் சென்று விட்டார்... அவருடைய குடும்பத்தைக் குறித்து தேவன் அநேகக் காரியங்களை எடுத்துக்கூறி, அவர் என்ன செய்ய வேண்டுமென்றும் அறிவுரை கூறினார். அவர் மேடையை விட்டு சென்று அமர்ந்து கொண்டார். சில நிமிடங்களுக்குள் அவரைப் போன்ற வேறொருவர் மேடைக்கு வந்தார். அவர் தலை குனிந்திருந்தார். அதனால் அவரை என்னால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் மீண்டும், மேடையிலிருந்து சென்று அங்கு அமர்ந்த மனிதரைத் தேடத் தொடங்கினேன். மேடைக்கு வந்தவர் அவரல்ல. அது வேறு ஏதோ ஒன்றாகும். நான் தேடியும் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். யாரும் என் பின்னால் இல்லை. நான், ‘அந்த மனிதர் திரைக்குப் பின்னால் அமர்ந்து கொண்டிருக்கிறார்’ என்றேன். அவர் நமது சபைக்கு வரும் சகோதரன். அவர் உயரமாகவும், வழுக்கைக் கொண்டவராகவும் அழகாகவும் இருப்பார். அவர்

தலை குனிந்து ஜெபம் செய்து கொண்டிருந்தார். ஏனெனில் வயிற்று வலி காரணமாக அவர் மரிக்கும் தருவாயில் இருந்தார்.

அவருடைய மனைவி அவருக்கு புதிய காலணிகள் வாங்கித்தர வேண்டுமென்று நினைத்திருந்தாள். அவரோ, “வேண்டாம், அதை அணிவதற்கு நான் உயிரோடிருக்க மாட்டேன்” என்று கூறி விட்டார்.

அவர் மரித்துக் கொண்டிருந்தார். அவர் **வேறொரு பரிமாணத்தில் அங்கு அமர்ந்திருந்தார்...** அல்லேலூயா! தேவன் அங்கு வந்து, “அதோ அவர் அங்கு அமர்ந்திருக்கிறார்” என்று அவர் தலைகுனிந்து ஜெபம் செய்துகொண்டிருப்பதைக் காண்பித்தார். நான் என்ன கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா?

**கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில்**
**வெளிப்படுகின்றார், ஆகஸ்ட் 22, 1965 காலை,**
**பத்தி எண் 63–65**

அது போன்று தான் மோசேயும். அவன் அவ்வளவாக ஆவியில் நிறைந்து, அவன் வாழ்ந்த பரிமாணத்திலிருந்து கடந்து, எரிந்து கொண்டிருக்கும் புதரில் தேவனுக்கு முகமுகமாய் நின்று, தேவனுடன் பேசினான். அவர், “உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப் போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி” என்றார்.

**கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில்**
**வெளிப்படுகின்றார், ஆகஸ்ட் 22, 1965 காலை**

★★★★★

# பறக்கும் தட்டுகள்

## ஆதியாகமம் 18:20–22

பின்பு கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும்,

நான் இறங்கிப்போய், என்னிடத்தில் வந்து எட்டின அதின் கூக்குரலின்படியே அவர்கள் செய்திருக்கிறார்களோ இல்லையோ என்று பார்த்து அறிவேன் என்றார்.

அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம் விட்டுச் சோதோமை நோக்கிப் போனார்கள்; ஆபிரகாமோ பின்னும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்.



இதைக்குறித்து தேவனுடைய தீர்க்கதரிசி பிரான்ஹாம் கூறியுள்ளதை கவனியுங்கள்:

*வானத்தில் பறந்து கொண்டிருக்கும் அந்த தட்டுகள் – அவர்கள் 'பறக்கும் தட்டுகள்' என்று அழைக்கின்றனர்... சரி, அதை பேசாமல் அப்படியே விட்டுவிடுவது நல்லது. "அவர்கள் (பறக்கும் தட்டில் வருகிறவர்கள்) எவ்விதம் காணாமற் போய் விடுகின்றனர் என்பதைக் குறித்து கேள்விப்பட்டீர்களா?" என்று கேட்கின்றனர். அவர்கள் சொல்வதைக் கேளாதீர்கள். அவர்கள் அங்கு தான் நின்று கொண்டிருக்கின்றனர். அவர்கள் நமது கண்களுக்குத் தென்படாமல் மறைந்து விடுகின்றனர்.*

அப்படித்தான் எடுத்துக்கொள்ளப்படுதலும் இருக்கும். அவைகளில் ஒன்று கீழே இறங்கி வரும். பூமிக்குரிய இந்த சரீரம் வானத்துக்குரிய சரீரத்தை தரித்துக் கொள்ளும். அப்பொழுது தோல், மயிர், எலும்புகள்... அது ஒரு நொடிப் பொழுதில் மறுரூபமாகும். அது விண்வெளியிலிருந்து கீழே இறங்கி வந்து அவர்களைக் கொண்டு செல்லும். அவையெல்லாம் (பறக்கும் தட்டுகள்) இப்பொழுதே வந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். 'பென்டகன்' வானத்தில் தோன்றும் அந்த மர்மமான ஒளியைக் குறித்து வியந்து கொண்டிருக்கிறது. ஜெபர்சன்வில்லில் வெளியிடும் செய்தித்தாள் ஒன்றில் இந்த மர்மமான ஒளியைக் குறித்து வெளியிட்டிருந்தனர். "அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை" என்று அதில் எழுதியிருந்தது. சிறு பிள்ளைகளே, நான் கூறுவதைக் கேளுங்கள். வரப்போகும் ஒரு நாளில் அவை உங்களையும் கொண்டு செல்லும் (பாருங்கள், பாருங்கள்?). கவலைப்பட வேண்டாம். "சோதோமின் நாட்களில் நடந்தது போல..." என்று இயேசு கூறினதை நினைவு கூருங்கள்.

தேவன் சில தூதர்களுடன் இறங்கி வந்தார். அப்பொழுது அவர்கள் விசாரணை நியாயத்தீர்ப்பை (Investigation Judgement) நடத்தினர். அவர், "பாவம் நிறைந்த கூச்சலை நான் கேட்டேன். அது

*மிகவும் உரத்த சத்தமாயிருந்தது. அது உண்மையா இல்லையா என்று கண்டறிய நான் இறங்கி வந்தேன்” என்றார். அது சரி தான். அந்த பிரதானமானவர் ஆபிரகாமுடன் பின்தங்கி, அவருக்குப் பின்னால் இருந்த சாராளின் இருதயத்திலுள்ள சிந்தனைகளைப் பகுத்தறிய முடிந்தது.*

*இப்பொழுது நீங்கள் சற்று கவனிப்பீர் களானால், இன்றைக்கும் அதுவே சம்பவிக்கிறது. அது விசாரணை நியாயத்தீர்ப்பு, சற்று பின்பு, சபையானது அதன் ஸ்தானத்தில் நிலைநின்று, எல்லா வித்துக்களும் அதனிடம் கொண்டு சேர்க்கப்பட்ட பின்பு, அவர்கள் போய் விட்டிருப்பார்கள். அவர்களுக்கு நேர்ந்தது என்னவென்று மற்றவர்களுக்கு தெரியாது. அவர்களைத் தேடிக்கொண்டு ஒருவர் ஒருபுறமாக செல்வார். பாருங்கள்? ஒருவர் போதகர் வீட்டுக்குச் செல்வார். வேறொருவர் இங்கும் வேறொருவர் அங்கும் செல்வார்கள். அவர்கள் அங்கில்லை என்பதை அறிந்து கொள்வார்கள். இவர்களுக்கு முன்னடையாளமாயிருந்த ஏனோக்கு காணப் படாமற்போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார் (ஆதி 5:24). விசாரணைக்காக அவர்கள் இறங்கி வருகின்றனர். ஏனோக்கு மறுரூபமாதலின் தொடர்ச்சியாக, தற்போதைய இஸ்ரவேலருக்கு முன்னடையாளமாக, அவர்கள் பேழைக்குள் பிரவேசிக்கின்றனர்.*

## கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், ஆகஸ்ட் 22, 1965 காலை, பத்தி எண் 68–69

பாருங்கள், பறக்கும் தட்டு என்னவென்று உலகம் அறியாமலிருக்கிறது. ஆனால் உங்களுக்குத் தெரியும்... உங்களுக்குத் தெரியும். அது என்ன வென்று நமக்குத் தெரியும். அது, என்ன நடக்கிறதென்று பார்த்து நியாயம் விசாரிப்பதற்காக வரும் தூதர்கள், பாருங்கள். அது 'பென்டகன்' போன்ற வேவு பார்க்கும் இடத்துக்கு வந்து, அவர்கள் மின்னலைப் போல் அங்கிருந்து வேகமாக சென்று விடுகின்றனர். அது என்னவென்று அவர்கள் கண்டுபிடிப்பதற்கு முன்பே, அவர்கள் மறைந்து விடுகின்றனர். பாருங்கள், அது என்னவென்று அவர்களுக்குத் தெரியாது. அவர்கள் என்ன வேண்டு மானாலும் நினைக்கட்டும். அவர்கள் அதை பறக்கும் தட்டுகள் என்றழைக்கின்றனர். அவர்களுக்குத் தெரியாது.

## இதை அறியாமலிருக்கிறாய், ஆகஸ்ட் 15, 1965

"நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷ குமாரன் வரும் நாட்களிலும் நடக்கும். ஏனெனில் அவர்கள், புசித்தார்கள் குடித்தார்கள் பெண் கொண்டும் கொடுத்தும்; பெரிய கட்டிட திட்டங்களை வகுத்துமிருந்தார்கள்." நாம் உலகத்தை கவனிப்போம், "மேலே வானத்தில் அடையாளங் களும், பயங்கரமான காட்சிகளும் உண்டாயிருக்கும்

(இது பறக்கும் தட்டுகள்), அநேக இடங்களில் பூமியதிர்ச்சிகளும், கடல் கொந்தளிப்பும் (உயரமான அலைகள்), மனிதர்களுடைய இருதயங்கள் (பயத்தால்) சோர்ந்து போம், தேசங்களுக்கிடையே தொந்தரவு, தவிப்பான நேரமுமாயிருக்கும்."

**கோத்திர பிதா ஆபிரகாம், பிப்ரவரி 7, 1964, பத்தி எண் 84**

பூகோளயியல்படி இப்பூமியை நாங்கள் காண்கின்றோம்; அந்த அடையாளங்களை நாங்கள் காண்கின்றோம்; பற்பல இடங்களில் பூமியதிர்ச்சிகள், இராஜ்ஜியத்திற்கு விரோதமாய் இராஜ்ஜியங்கள் போன்றவற்றைக் காண்கிறோம். முன்னறிவிக்கப்பட்டக் காரியங்கள் நிகழ்வதை நாங்கள் காண்கிறோம். வானத்தில் பயமுறுத்தும் காரியங்களையும், யாராலும் விவரிக்க இயலாத பறக்கும் தட்டுகள் போன்றவைகளை காண்கிறோம். மனிதருடைய இருதயங்கள் கலங்குகின்றன, பூமியின் மேல் ஆராயும் நியாயத் தீர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. அணு குண்டுகள் எல்லா இடங்களிலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு மணி நேரத்தில் முழு அழிவைக் கொண்டு வரக்கூடியதான சக்தி வாய்ந்த ஏவுகணைகளை நாங்கள் காண்கிறோம். வானத்திலிருந்து அக்கினிகளை பொழிந்து இப்பூமியை அழிப்பதற்காக எங்களுக்கு மேலாக வாயு மண்டலம் பரவியிருப்பதை நாங்கள் காண்கிறோம்.

**நம்ப முடியாதது, ஆனாலும் உண்மை!, பிப்ரவரி 6, 1964, பத்தி எண் 270**

நாம் ஒரு ஆபத்தான நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவை சம்பவிக்கும் போது, “இனி காலம் செல்லாது” என்பதாக வேதம் கூறுகிறது. சமயம் கடந்து கொண்டே போகிறது.

இப்பொழுது அநேக இடங்களில் பூகம்பங்கள் உண்டாவதைக் காணும் போது – அன்றொரு நாள் ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் அல்லவா?

வானத்தில் பயங்கரமான தோற்றங்கள் – அக்கினி ஸ்தம்பங்களைப் போல் வானத்தில் மிதக்கும் பறக்கும் தட்டுகள். அது என்னவென்றே அவர்களுக்குத் தெரியவில்லை. பாருங்கள்? அதைக் குறித்த எந்தவித கருத்தும் கூட அவர்களிடம் இல்லை.

சோதோம் அழிக்கப்படுவதற்கு முன்பு தூதர்கள் அங்கு சென்று விசாரணை செய்தார்கள் அல்லவா? உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? (சபையோர் “ஆமென்” என்கின்றனர் – ஆசி) அவர்கள் குழுவாக கீழே வந்தனர், மூன்று பேர் வந்தார்கள். ஒருவர் ஆபிரகாமிடம் தங்கி விட்டார். உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? (“ஆமென்”) அவர்கள் விசாரணை நியாயத்தீர்ப்புக்காக வானத்திலிருந்து இறங்கி வந்த ஒளிகள்...

*அவை இப்பொழுது எங்கு காணப்படுகின்றன என்று பாருங்கள். 'பென்டகனை' சுற்றிலுமே அந்த பறக்கும் தட்டுகளை அவர்கள் காண்கின்றனர். அது தான் உலக நியாயத்தீர்ப்பு - சோதோம். அதில் ஒருவர் சபையின் பிரதிநிதியாக இருப்பார். அது தம்மை உறுதிபடுத்தும் கிறிஸ்துவே. "சாட்சிகள்... மேலே வானங்களில், கீழே பூமியில் அடையாளங்கள்." நிச்சயமாக.*

**கிறிஸ்து தேவனுடைய பரமரகசியத்தின் வெளிப்படுதலாயிருக்கிறார், ஜூலை 28, 1963, பத்தி எண் 604–608**

*இங்கே உலகம் இந்த நிலையில் உள்ளது. அங்கே அந்த தேசமும் அதன் நிலையும். ஸ்திரீகளும் அவர்களின் நிலையில் உள்ளனர். அங்கே மனிதனும் அந்நிலையில் உள்ளான். அங்கே சபையும் அந்நிலையில் உள்ளது. எல்லாக் காரியங்களும் அங்கே உள்ளன. இயற்கை சூழல்கள், அடையாளங்கள், பறக்கும் தட்டுகள் போன்ற மர்மமான அடையாளங்கள் வானத்தில் காணப்படுகின்றன. கடல்கள் கொந்தளிக்கின்றன. கடல் அலைகள் உயர எழும்புகின்றன. மனிதனின் இருதயம் சோர்ந்து போதல், பயம், சிக்கல்கள் நிறைந்த காலம், நாடுகள் மத்தியில் பீதி, பயம், சபை விழுந்து போய்க் கொண்டிருக்கின்றன.*

**முறையிடுகிறது என்ன? சொல்!, ஜூலை 14, 1963, பத்தி எண் 235**

இன்னுமொரு காரியத்தை நான் கூற விரும்புகிறேன். தேசங்களுக்கிடையே இக்கட்டும் துன்பமும் ஏற்பட்டுள்ளது; வானங்களிலே பயத்தை ஏற்படுத்தும் காட்சிகள், அது அவ்விதமாக உள்ளது என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? கவனியுங்கள், அவற்றில் இரண்டை நாம் எடுத்துக்கொள்வோம். ஒன்பதரை மணி ஆவதற்கு இன்னும் இரண்டு நிமிடங்கள் நமக்கு உள்ளனவா? அதற்கு மேல் இவ்வரங்கத்தினை நான் வைத்துக் கொள்ள விரும்பவில்லை. இம்மக்கள் நமக்கு இதை அளித்திருப்பது கிருபையே. செவிகொடுங்கள். எத்தனை பேர்கள்... நீங்கள் அதைப் பார்த்திருக் கிறீர்கள். சமீபத்தில் தேசமானது அடையாளங்கள் நிமித்தமாக அசைந்து விட்டது. விண்வெளி வீதியில் சுற்றி வந்த இம்மனிதன் என்னத்தைக் கண்டான் என்பதை நீங்கள் கவனித்தீர்களா? அவன் இதுவரை கண்டிராத காட்சிகளைக் கண்டான். அவைகள் என்னவென்று விஞ்ஞானத்திற்குக் கூடத் தெரியாது. அவன் பூமியைச்சுற்றி வரும்போது, அதைத் தேடிப் பார்த்த போதும் அவர்களால் அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. அவன் தான் சுற்றி வரும் கோள்வீதி தான் தூள் தூளாகிவிட்டதோ என்று எண்ணினான். ஆனால் அது அவ்வாறில்லை. அவனது கோள்வீதி சரியாகத்தான் இருந்தது. விளக்குகள்...

என்ன ஏற்பட்டது என்பதைக் கவனியுங்கள். பறக்கும் தட்டுகளைப் பற்றி ரேடியோவிலும்,

நீங்கள் கேட்டிருக்கிறீர்கள், தொலைக்காட்சியிலும் அதைக் குறித்து பார்த்திருக்கிறீர்கள்; செய்தித் தாள்களிலும் வந்துள்ளது. எங்கிலும் அது தோன்றியுள்ளது. பென்டகன் ஆறு வாரங்களுக்கு முன்னர், அதைப் பற்றி அறிக்கை வெளியிட்டது; அது ஒன்றும் எட்டுக் கட்டிய கற்பனைக் கதை அல்ல. (பென்டகன் என்பது அமெரிக்க நாட்டின் பாதுகாப்புத் துறையை சார்ந்த (இராணுவ) அலுவலகங்கள் அமைந்த ஐந்து பக்கமுள்ள (ஐங்கோண வடிவிலான) கட்டிடம் ஆகும் – அமெரிக்க இராணுவத் தலைமைப் பீட அலுவலகம் – தமிழாக்கியோன்) அவர்கள் தொலைக்காட்சியில் எவ்விதமாக பறக்கும் தட்டுகள் பென்டகனுக்கு மேலே புலனாய்வு விளக்குகளோடு பறந்தபடியே தொங்கிக் கொண்டிருந்ததை படம் பிடித்தோம் என்பதைக் காண்பித்தார்கள். வாஷிங்டன் டி.சி. முழுவதிலும் அது காணப்பட்டது. அது ராடாரிலே தெரிந்தது, அதை அருகில் போய் பார்க்க பைலட்டுகளை அனுப்பினார்கள், அவர்கள் அவைகளை சுற்றி சூழ்ந்து நெருங்கி வளைக்கப் பார்த்தார்கள். அப்போது, அவைகள் மின்னல் வேகத்தில் அங்கிருந்து கடந்து சென்று விட்டன. அதில் காணப்பட்ட அறிவுத்திறன், விவேகம் – அது எப்படிப்பட்டது. பயப்படத்தக்கதான அடையாளங்கள், காட்சிகள் வானங்களிலே காணப்படும் என்றும், மனிதருடைய இருதங்கள் பயத்தினாலே சோர்ந்து போகும் என்றும் இயேசு

கூறினார்; ஜனங்களுக்கு மத்தியில் இடுக்கண் உண்டாகும். தத்தளிப்பின் காலங்கள் உண்டாகும் என்று இயேசு கூறினார். *(லூக்கா 21:25,26)*

**கடைசி கால வித்தின் அடையாளம், மார்ச் 19, 1962, பத்தி எண் 74–75**

★★★★★

S.டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை–600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**

*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*

*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260